# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **96/ந/2018**

நாள் : **13/09/2019**

**திரு. கா. சுப்பராயன்,**
**3/139 , பாரதி நகர்,**
**மோகனூர் ரோடு,**
**நாமக்கல் 637 001.** – **முறையீட்டு மனுதாரர்**

1. **திரு கு.பாலசுப்ரமணியன்,**
**நகராட்சி ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**

2. **திரு. கமலநாதன்,**
**நகராட்சிப் பொறியாளர்,**
**நாமக்கல் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்கள்**

நாமக்கல் மாவட்டம், மோகனூர் சாலை, பாரதி நகர், கதவிலக்கம் 3/139 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு கா. சுப்பராயன் அவர்களின் 30.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2018 அன்று பெறப்பட்டு 96/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், நாமக்கல் நகரட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் அறிக்கைகள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

நாமக்கல் மாவட்டம், மோகனூர் சாலை, பாரதி நகர், கதவிலக்கம் 3/139 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு கா. சுப்பராயன் என்பவர் நாமக்கல் நகராட்சி 38–வது வார்டு, கதவிலக்கம் 5/509 எண்ணிட்ட தனது வீடு ஒன்றினை வேறு ஒருவருக்கு ரூ.7,500/–க்கு வாடகைக்கு விட்டுள்ளதாகவும், நாமக்கல் நகராட்சியின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் மேற்கண்ட வார்டில் வீட்டு வரி குடிநீர் வரி, குப்பை வரி ஆகியவற்றை வசூலித்து வருகின்றனர் என்றும், 2011–ஆம் ஆண்டு நாமக்கல் நகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டபோது கொண்டிசெட்டிபட்டி ஊராட்சி முற்றிலும் நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்டது என்றும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் சேலம் வீட்டு வசதி பிரிவில் அழகு நகா, அன்பு நகர், முல்லைநகர், கணபதி நகர் குடியிருப்புகள் கட்டப்பட்டு கொண்டிசெட்டிபட்டி ஊராட்சியிடம் ஒப்படைக்கப் பட்டதென்றும், மேற்கண்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கான வீட்டுவரியை நாமக்கல் நகராட்சி முறையாக வசூலித்துவருகிறதென்றும், கணபதி நகரில் மட்டும் தண்ணீர் வரி, வீட்டுவரி வசூலிப்பதுடன் குடிநீர் விநியோகித்தல், குப்பை சேகரித்தல் பணிகளையும் முறையாக செய்து வருகிறதென்றும் மற்ற பகுதிகளுக்கு குடிநீர் வரி வசூலிக்க வில்லை என்றும், அப்பகுதிகளில் உள்ள நலச் சங்கங்கள்

ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.400/– கட்டணம் வசூலித்து, ஆழ்துளைக் கிணற்றில் இருந்து நீர் சேகரித்து வீடுகளுக்கு விநியோகிப்பதும், வீடுகள்தோறும் குப்பைகளை சேகரித்து அகற்றுதல், கழிவு நீர் கால்வாய்களை தூய்மை செய்தல் போன்ற பணிகளை எதிர் மனுதாரர்களின் ஒப்புதலோடு செய்து வருவதாகவும், இதுசம்பந்தமாக பலமுறை விண்ணப்பங்கள் அளித்தும் பயனில்லை என்றும், அதன்பின்னர் 2016–ஆம் ஆண்டு முதல் ஏற்கனவே குடிநீர் இணைப்பு இருந்த வீடுகளுக்கே கூடுதல் காப்புத் தொகையாக ரூ.3,000/– வீதம் வசூலிக்கப்பட்டன என்றும், மேலும் எந்தபணியையும் செய்யாது வரியை மட்டுமே வசூலித்து வந்தனர் என்றும் இது முற்றிலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிரானதாகும் என்றும், மேற்கண்ட செயல்கள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு மூன்று முறைக்கும் மேல் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், முல்லை நகர் 5/509 கதவு எண் உள்ள தனது வீட்டிற்கு, நகராட்சிக்கு செலுத்தவேண்டிய சொத்துவரி, குடிநீர் வரி, குப்பை வரி ஆகியவை நிலுவை இன்றி செலுத்தப்பட்டும் தன் வீட்டிற்கான குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு கொடுக்கப்படும் வரை காலிசெய்யப்பட்ட தனது வீட்டிற்கு மாதம் ரூ.7,500/– ஐ இரண்டு எதிர்முறையீட்டாளர்கள் தர பணித்தும், நகராட்சி சட்டத்திற்கெதிரரக செயல்பட்ட வகையில் எதிர்மனுதாரர்களுக்கு அபராதம் விதிக்கவும் துறைரீதியான நடவடிக்கைக்கு பரிந்துரைக்கவும், தனக்கு இழப்பீடு / செலவுத் தொகை வழங்குவதற்கு ஆணையிடுமாறு கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

3. இம்முறையீடு குறித்து 10.10.2018 நாளிட்ட நகராட்சி ஆணையாளரின் அறிக்கை வரப்பெற்றது. அவ்வறிக்கையில் பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

"அழகு நகர், அன்பு நகர், முல்லை நகர் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடிநீர் இணைப்பு வழங்கி குடிநீர் வழங்கி வந்தது என்றும், அதனை அந்தந்த நகரில் உள்ள நலச் சங்கங்களே பராமரித்து வந்தன என்றும் அதனடிப்படையில் கொண்டிசெட்டிபட்டி ஊராட்சி நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், மனுதாரர் ஆதாரமின்றி உள்நோக்கத்துடன் அதிகாரிகள் ஆதாயம் பெறுவதாக தவறான தகவலை தெரிவித்துள்ளதாகவும், நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கென தனியாக பணியாளர்கள் உடனடியாக நியமிக்கப்படாததால் ஏற்கனவே இருந்த பணியாளர்களைக் கொண்டு நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டதென்றும், சங்க நிர்வாகிகள் தனிப்பட்ட காரணங்களுக்காக நகராட்சி மீது குற்றம் சுமத்தி வருவதாகவும் மேற்குறிப்பிட்ட பகுதி நகராட்சியுடன் இணைக்கப்பட்டபின்னர் மேற்கண்ட நகரின் அடிப்படை வசதியினை நகராட்சியே மேற்கொண்டு வருகிறதென்றும் மேற்படி பகுதியில் குடிநீர் ஆதாரங்கள் வறண்டு விட்டதால் நகராட்சி மூலம் குடிநீர் வழங்கிட அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் முன்வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு விண்ணப்பம் வழங்கியதின் பேரில் குடிநீர் உபவிதிகளின் படி ரூ.3,000/– வைப்புத் தொகை வசூல் செய்து கொண்டு மேற்படி பகுதிகளில் குடிநீர் இணைப்புகளுக்கு நகராட்சி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு மாதாந்திர கட்டணமும் வசூல் செய்யப்பட்டு வருகிறதென்றும், இதுவரை 774 குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு மொத்தம் ரூ.9,27,504/– வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும். அதன்படி மார்ச் 2018 வரை ரூ.10,13,904/– மாதாந்திர கட்டணமாகவும் வைப்புத் தொகையாக ரூ.23,22,000/– வசூல் செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொதுமக்கள் எவரிடமிருந்தும் எவ்வித புகாரும் எழவில்லை என்றும், நலச்சங்கத்திற்கும் நாமக்கல் நகராட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிரானது என்ற புகார் எழாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அழகு நகர், அன்பு நகர், முல்லை நகர் பகுதிகளில் அனைத்து அடிப்படை பணிகளையும் நாமக்கல் நகராட்சியே மேற்கொண்டு வருகிறது என்றும், மேலும், நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்ட புகார் மனு தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல

இயக்குநரக அலுவலர்கள் மூலமாக 20.06.2018 நாளன்று மனுதாரர் திரு கா. சுப்பராயன் அவர்களிடம் விசாரணை நடத்தி உரிய அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது என்றும், மேற்கண்ட மனுதாரரின் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படவில்லை என்பதை மனுதாரரிடம் விளக்கப்பட்டதாகவும் மனுதாரரால் தகவல் தெரிவிக்கப்பட்டவுடன் நகராட்சி பணியாளர்களால் குடிநீர் இணைப்பின் குழாய்கள் சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டது எனவும் ஆணையாளரும், நகராட்சி பொறியாளரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என உண்மைக்கு மாறான தகவலை உள்நோக்கத்துடன் தெரிவித்துள்ளார் என்றும், அன்பு நகர், முல்லை நகர், அழகு நகர் ஆகிய பகுதிகளில் அடிப்படை பணிகளை நாமக்கல் நகராட்சியே செய்து வருவதாலும், நலச்சங்கம் வசூலிக்கும் மாதாந்திர கட்டணத்திற்கும் நாமக்கல் நகராட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததாலும், மனுதாரரின் புகார் மனு மீது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாலும் மனுதாரரின் புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. "

4. நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து தல ஆய்வு செய்து விரிவான அறிக்கையினை அனுப்புமாறு 07.11.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், சேலம் அவர்களுக்கு 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், பிரிவு 6 (4)–இன் கீழ் ஆணையிடப்பட்டது.

5. 22.11.2018 அன்று முறையீட்டு மனுதாரரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை வலியுறுத்தி, 2016–இல் குடிநீர் கட்டணம் வசூலித்த நாமக்கல் நகராட்சி குடிநீர் வழங்காமல் 2018–ஆம் ஆண்டு மே மாதம் முதல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ஆணைகளின்படி மேற்படி பணியை மேற்கொண்டனர் எனவும் தெரிவித்துள்ளார். சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் 26.07.2019 நாளிட்ட அறிக்கையில், நாமக்கல் நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ள விவரங்களைத் தெரிவித்துள்ளதுடன் கூடுதலாக சில விவரங்களும் தெரிவிக்கப் பட்டுள்ளன:-

> " ஆய்வில் மேற்படி பகுதிகளில் மனுதாரர் கூறியுள்ளது போல முல்லை நகர் மற்றும் அழகு நகர் பகுதிகளுக்கு 2016–க்கு முன்னரும் அன்பு நகர் பகுதிக்கு 2018–க்கு முன்னரும் சம்பந்தப்பட்ட நலச் சங்கங்களால் செய்திருக்க வாய்ப்பு உள்ளதென்றும், ஆனால் நாமக்கல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டபின்னர், நாமக்கல் நகராட்சி மூலம் தனியாக பணியாளர்களை நியமனம் செய்து குடிநீர் விநியோகம், சுகாதாரப் பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு போன்ற பணிகள் நாமக்கல் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டுவருவது ஆய்வின் மூலம் தெரியவருகிறதென்றும், 2016–ஆம் ஆண்டு முதல் நாமக்கல் நகராட்சி மூலம்தான் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறனெவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலர்கள் நாமக்கல் நகராட்சி அலுவலகத்தில் 20.06.2018–அன்றுஆம் தேதி மனுதாரர் திரு கா.சுப்பராயன் முன்னிலையில் விசாரணை நடத்தி உரிய அறிக்கை நாமக்கல் நகராட்சியிலிருந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதெனவும், நகராட்சி நிர்வாக ஆணையர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மனுதாரர் தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. "

6. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் குடிநீர் இணைப்பு சரிசெய்யப்பட்டு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ள விவரம் ஆணையாளரின் அறிக்கையில் தெரிய வருகிறது. ஆனால், ஆவணங்களைப் பரிசீலித்ததில் 01.05.2018 முதல்தான் புகாருக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை பணிகள் நாமக்கல் நகராட்சி நிர்வாகத்தின் முழுப்பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது புலனாகிறது. அதுநாள் வரை சம்பந்தப்பட்ட பகுதியின் நலச் சங்கத்தாரால் முகவர் போல மேற்படி

பணிகள், நகராட்சியின் எவ்வித அனுமதியும் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி செய்ய வேண்டிய கடமைகளை மேற்படி நலச்சங்கங்கள் மூலம் செய்ய அனுமதித்து வரிக் கட்டணங்கள் / வைப்புத் தொகைகள் வசூலிக்காமல் இருந்தது நிர்வாக சீர்கேடாகவே கருதப்பட்டு, அதற்கு பொறுப்பான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான / சட்டப்படியான நடவடிக்கை தொடரவும் மற்றும் நிதி இழப்பு ஏதுமிருந்தால் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து வசூலித்து ஈடுசெய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரைத்து, திரு வ. சின்னப்பன் என்கிற முறையீட்டு மனுதாரரது மனுவின் (மனு எண்.190/ந/2017) மீது இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட 22.07.2019 நாளிட்ட ஆணை இம்முறையீட்டு மனுவிற்கும் பொருந்தக்கூடியதாகும் என்பதால், மேற்படி 22.07.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணையின் படி தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. [illegible]பராயன்,
   3/139, பாரதி நகர்,
   மோகனூர் ரோடு,
   நாமக்கல் – 637 001.

2. திரு. கு.பாலசுப்ரமணியன்,
   நகராட்சி ஆணையாளர்,
   நாமக்கல் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.

3. திரு. கமலநாதன்,
   நகராட்சிப் பொறியாளர்,
   நாமக்கல் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   சேலம் மண்டலம், சேலம்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சாந்தோம் நெடுஞ்சாலை,
   சென்னை – 600 028

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி